1967 ஜுலை 18

	Year.	Amount in rupees.	
3 Provision of Oscillating table fan ..	1964	122	00
4 Provision of moveable screen and a partition in teak-wood.	1964	300	00
5 Provision of one almirah (wall cup-board).	1965	525	00
6 Special repairs to chicks	1965	570	00
7 Provision of table, chair, carpets, etc., before the year—	1950	1,929	04
	1957-58	462	00
	1963	1,192	00
	1964	580	00
	1965	525	00

Except for a wall cup-board (item 5 above) all other items of furniture, etc., supplied have been returned on the former Chief Minister demitting office. In the case of the wall cup-board as he has desired to retain it, Government have agreed to it and to recover the depreciated value of this item from him.

இணைப்பு III.

[22-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 405-க்கான விடையைக் காண்க.]

(அ) மக்கள் பயன்படுத்தும் இன்றியமையாப் பண்டங்கள் சிலவற்றின் விலைகள் பொதுவாக அதிகரித்தன. ஆனால், ரூபாய் மதிப்பு குறைக்கப் பட்டதே விலை அதிகரிப்புக்குக் காரணம் என்று கூறிவிட முடியாது.

(இ) மிளகாய், கடலை எண்ணெய், வெல்லம் ஆகியவற்றின் விலைகள் சிறிது உயர்ந்தன. பதிலின் (அ) பகுதியில் குறிப்பிட்டுள்ளபடி, விலை வாசிகள் உயர்வுக்கு ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதே முழுவதும் காரண மாகாது.

(உ) ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதின் விளைவாக இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயர்வதைத் தடுப்பதற்கென, முந்திய அரசு சில நடவடிக்கைகளை மேற்கொண்டது. கடலை எண்ணெயின் விலையைக் குறைப்பதற்காக தென்னார்க்காடு மாவட்டத்தில் வேர்க்கடலையை அரசாங்கக் கணக்கில் வாங்குவது, ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயராமல் இருப்பதற்காகச் சில நகர்ப்புற இடங்களில் துறையினர் பண்டக சாலைகளைத் துவக்குவது போன்ற நடவடிக்கைகளை முந்திய அமைச்சு மேற்கொண்டது. எனினும், இன்றியமையாப் பண்டங்களின் விலைகள் உயராமல் தடுக்க அந்த நடவடிக்கைகள் போதுமானவைகளாக இல்லை, முந்திய அரசு கடலை எண்ணெய் குறித்து அரசாங்க வாணிகத்தை மேற்கொண்ட சில வாரங்களுக்குப் பிறகு கடலை எண்ணெயின் விலை சிறிது குறைந்தது. ஆனால், சென்னையில் அரசு கடலை எண்ணெய் குறித்து அரசாங்க வாணிபத்தை மேற்கொண்டதால்தான் கடலை எண்ணெய் விலை குறைந்ததாகக் கூறிவிட முடியாது. குஜராத் மாநில அரசு கடலை எண்ணெய் ஏற்றுமதியின் மீது விதித்திருந்த தடையை நீக்கியதை யும் அதற்குக் காரணமாகக் கூறலாம். இத்துடன் ஓரளவுக் வேர்க் கடலை தென்னார்க்காடு மாவட்டத்தில் முறைப்படுத்திய சந்தைகளிலிருந்து வாங்கப்பட்டது. ஆனால் இதன் விளைவாக உணவு எண்ணெய் விலைகளில் மாறுதல் ஏற்படவில்லை. முந்திய அரசு பருப்பு வகைகளில் அரசாங்க வாணிபம் மேற்கொண்டதனால், பருப்புகளின வெளிச்சந்தை விலைகள் உயர்வது ஓரளவு தடுக்கப்பட்டது.

(2) இம்மாநிலத்தில் வாழ்க்கைச் செலவுப் புள்ளியை நிர்ணயிப்பதில் உணவுத தானியங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதை யாவரும் அறிவர். இம்மாநிலத்தில் மக்களின் முக்கிய உணவு அரிசியாகும்.

முதற்கண் கொள்முதல் வேலைகளை மும்முரமாக்குவதென முடிவு செய்யப் பட்டது. கொள்முதல் வேகம் அதிகரித்தவுடன் சென்னையிலும் கோயம் புத்தூரிலும் உள்ள சட்ட பூர்வமான பங்கீட்டுப் பகுதிகளில் 15—5—1967 முதல் ஒரு படி அரிசி 1 ரூபாய்க்கு விற்பதென முடிவு எடுக்கப்பட்டது. சென்னையைச் சுற்றிலும் உள்ள முறைப்படியற்ற பங்கீட்டுப் பகுதிகளிலும் ஏனைய அத்தகைய பகுதிகளிலும் ரூபாய்க்கு 1 படி அரிசி வழங்கும் திட்டம் படிப்படியாகச் செயலுக்குக் கொண்டுவரப்படும். அரிசியின் விலை குறைந்தால் காலப் போக்கில் ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகளும் குறைய வாய்ப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது. அரிசியின் விலைக்கும் ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகளுக்கும் புள்ளி விவர அடிப்படையில் ஒருமைப்பாடு உள்ளது என்றும், அரிசியின் விலைக் கேற்ப ஏனைய பண்டங்களின் விலைகளிலும் மாறுதல் ஏற்படுகின்றன என்றும் பொதுவாகக் கூறலாம்.

(3) ரூபாய்க்கு 1 படி அரிசி வழங்கப்படும் என்று அறிவித்த பிறகு அரிசியின் வெளிச்சந்தை விலைகள் குறைந்துள்ளன. துவரம் பருப்பைப் பொறுத்தவரையில், நம்மிடம் ஓரளவு இருப்பு உள்ளது. அதனால் வெளிச் சந்தையில் வர்த்தகர்கள் தம் விருப்பப்படி துவரம்பருப்பு விலையை உயர்த்துவது தடுக்கப்பட்டது. போலீஸ் கண்காணிப்புப் பிரிவு மேற் கொண்ட நடவடிக்கைகளின் காரணமாக, வெளிச்சந்தையில் அரிசி ஓரள வுக்குக் குறைந்த விலைகளில் கிடைக்கிறது. இதனால் எல்லா இடங்களிலும் அரிசியின் வெளிச்சந்தை விலைகள் குறைந்துள்ளன. அதே சமயத்தில் ஒரு ஏக்கரும் அதற்குக் குறைந்தும் நிலம் வைத்துள்ளவர்களிடம் கொள் முதல் செய்வதில்லை என்பதால் வெளிச் சந்தைகளில் அதிக அளவுக்கு அரிசி கிடைப்பது சாத்தியமாயிற்று. சட்டப்பூர்வமான பங்கீட்டுப் பகுதி களில் குறைந்த விலைகளில் அரிசி வழங்கப்படுவதால் அடுத்துள்ள மாவட் டங்களில் அதிக விலைகளில் அரிசி விற்பது குறைந்துள்ளது. எல்லா வற்றையும்விட, இருப்பு நிலையைக் கண்காணித்து வருவதாலும், உபரிப் பகுதிகளில் இருந்து பற்றுக் குறைப் பகுதிகளுக்கு உரியகாலத்தில் அரிசி யைக் கொண்டு செல்ல ஏற்பாடு செய்வதாலும், சம்பா அறுவடையின் போது கொள்முதல் வேலைகள் சரிவர நடைபெறவில்லை என்பதுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் சென்ற மூன்று மாதங்களில் கொள்முதல் வேலை கள் விரைவுபடுத்தப்பட்டதாலும் அரசிடம் மக்களுக்கு வழங்கப் போது மான அரிசி இருப்பு இருக்கிறது என்னும் கருத்து உருவாகியது. இதனால் வர்த்தகர்களின் மனதில் ஒரு வித மாற்றம் ஏற்பட்டது. மேலும் மிக இன்றியமையாத கால அளவிற்கு மேல் கட்டுப்பாடுகளை நீடிக்கத் தான் விரும்பவில்லை என்று அரசு அறிவித்துள்ளதனால், வர்த்தகர்கள் அரிசி இருப்புகளைப் பதுக்கி வைத்துக் கொள்ள விரும்பவில்லை, ஒருவர் தனது சொந்த உபயோகத்திற்காக 10 படி அரிசியைத் தாராளமாக எடுத்துச் செல்லலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், மக்கள் தங்கள் தேவை களுக்கு உள்ளூர்ச் சந்தைகளையே நம்ப வேண்டியிராத நிலை ஏற்பட்டது. இதனால், அரிசி இருப்புகளைப் பதுக்குவதால் தங்களுக்கு ஆதாயம் கிடைக் காது என்று வர்த்தகர்கள் உணர்ந்தனர்.

(4) எனினும், அரிசி விலை குறைந்ததால் ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகளும் குறையும் என்று எதிர்பார்த்ததுபோல் நடக்க வில்லை. வர்த்தகர்களிடமிருந்து ஒத்துழைப்பு கிடைக்காததே அதற்குக் காரணம். எனவே, ஏனைய இன்றியமையாப் பண்டங்களின் விலைகளைக் குறைக்க பிற நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது குறித்து அரசு ஆலோ சித்து வருகிறது. இதற்கென வருவாய்த்துறைக் கழகத்தின் இரண்டாவது உறுப்பினர், அத்தகைய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை ஒன்றை அனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். அந்த அறிக்கை கிடைத்துள்ளது. அது குறித்து மும்மரமாக ஆலோசித்தும் வருகிறோம்.

இம்மாநிலத்திற்கு வெளியில் வேர்க்கடலையும் கரும்பு வெல்லமும் ஏற்றுமதி செய்யப்படுவதற்கு தடைவிதிப்பது குறித்து ஆலோசித்து வரு கிறோம். அப்போதுதான் இம்மாநிலத்திலுள்ள வெளிச் சந்தைகளில் மிகுதியான அளவில் அவை கிடைத்து அவற்றின் விலைகள் குறைவதற்கு வழியேற்படும். இம்மாநிலத்தின் எந்தப் பகுதியிலும் பருப்பு வகைகள்

குறித்த பற்றுக்குறை இராமல் செய்ய, பிற மாநிலங்களிடமிருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்யவும், முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். இது குறித்து இந்திய அரசின் கருத்தை அறிய முற்பட்டுள்ளோம்.

நகரில் உள்ள அரசு பங்கீட்டுக் கடைகளும், மகளிர் பயன்கொள்வோர் பண்டகச் சாலைகளும், குழந்தைகள் உணவு போன்ற பொருள்களின் விலைகள் உயராமல் இருக்கப் பேருதவியாக இருந்துள்ளன. இப்பண்டங்களை அவை நியாயமான விலைகளில் மக்களுக்கு வழங்கின.

(எ) 7—6—1966 முதல் 25—5—1967 வரையில் பதுக்கி வைத்தல், கள்ளக் கடத்தல், கருப்புச் சந்தை வாணிபம் ஆகிய குற்றங்களுக்காக 2,342 பேர் கைது செய்யப்பட்டனர். 2,196 வழக்குகள் நீதிமன்றங்களில் தொடரப்பட்டன.

(ஐ) கைது செய்யப்பட்ட 2,342 பேர் குறித்த விவரம் வருமாறு :—

சென்னை மாநகரம்	186
செங்கற்பட்டு	255
தென் ஆர்க்காடு	88
தஞ்சாவூர்	65
திருச்சிராப்பள்ளி	186
மதுரை	213
இராமநாதபுரம்	127
திருநெல்வேலி	115
கன்னியாகுமரி	428
கோயம்பத்தூர்	103
நீலகிரி	3
சேலம்	44
தர்மபுரி	111
வட ஆர்க்காடு	126
ரயில்வே போலீஸ்	292
மொத்தம்	2,342

(ஒ) ஆம்.

(*a*) There was a general increase in the price level of some of the consumer goods but the increase cannot be attributed to the devaluation alone.

(*b*) There was some increase in the prices of chillies, groundnut oil and gur. As stated in part (*a*) of the answer, the increase in prices was not entirely due to devaluation.

(*c*) With a view to tackling the problem of increase in the prices of essential commodities as a result of the devaluation of the rupee the previous Government took some measures like purchast of groundnut kernel in South Arcot district on Government accoune to bring down the price of groundnut oil and opening of departmental stores in some urban centres to stabilise the prices of other essential commodities. However, these measures did not go to the root of the problem of stabilising the price level of essential commodities. There was a slight reduction in the price of groundnet oil a few weeks after the previous Government entered into State Trading in groundnut oil. But the reduction could be attributed only to the lifting of the ban on export of groundnut oil by the Government of Gujarat and not to State Trading in groundnet oil in

Madras. Besides only a small quantity of groundnut kernel was purchased from the regulated markets of South Arcot disrtict but this did not have any impact on edible oil prices. The policy of State Trading in pulses which was followed by the previous Government arrested to some extent the increasing trend in open market prices of pulses.

(2) It is well known that cereals play a major role in the determination of the cost of living index in the State and the staple food of the people of this State is rice. As a first step, a major decision was taken to intensify procurement and as soon as procurement picked up, it was decided to sell rice at one rupee a measure in statutorily rationed areas in Madras City and Coimbatore to start with, with effect from 15th May 1967 : this will in due course be extended to the belt area around the Madras City and other areas which are now covered by informal rationing in a phased programme. It is felt that the reduction of price of rice will lead in course of time to a sympathetic reduction in the prices of other essential commodities. Generally, there is a statistical correlation between the price of rice and prices of other essential articles, which vary directly with the price of rice.

(3) Following the announcement of the subsidised sale of rice, there has been a decrease in open market prices of rice all round. As for pulses, as we are holding some stock of Toor and Toordhal, the tendency for indiscriminate upward movement of dhal price by trade has been stopped. On account of the activities of the Police Vigilance Cell, more open market rice is available for circulation at slightly reduced prices and this also has led the downward trend of open market price of rice all over. At the same time, the concession given to the smaller cultivators that is, people who are holding one acre and less in the matter of exempting them from precurement, has made open market rice available in larger quantities. Besides, the distribution of rice at reduced rates in the statutorily rationed areas has tended to minimise the attraction for adjacent districts to sell rice on higher prices than in the statutorily rationed areas and above all, the close watch kept over the stock position and the proper and timely movement from surplus to deficit areas and also the quickening of tempo of procurement during the past three months as compared with the lull in procurement during early Samba operations have created the impression that Government sources of supply are adequate and this has had a psychological effect on trade which is not willing to risk hoarding of rice stocks as Government have also announced that it is not their intention to retain controls longer than strictly necessary. The liberalisation of issue of permits for transport of rice for personal consumption by allowing free transport of ten measures of rice has reduced the dependence of consumers on the local market only for their needs and this has impressed on the merchants that hoarding will not pay.

(4) However, the expectation that the fall in the price of rice would result in reduction in the prices of other commodities has not materialised as no co-operation has been forthcoming from the

business community. Therefore this Government is considering other measures to reduce the prices of other essential commodities and for this purpose, the Second Member. Board of Revenue was requested to make a study and send a report on such measures. The report has been received and it is under the active consideration of the Government.

We are considering the question of imposing a ban on export of groundnut kernel and cane jaggery outside the State so that larger quantities are circulated within the State for open market sale at cheap rates. This Government will also try to import pulses from other States so that no scarcity of pulses is experienced in any part of this State. The Centre has been approached in this regard.

The existence of Government ration shops in the City and also of a number of Women Consumer Stores has also helped to stabilise the prices of scarce articles like baby food and ensure sales of these to consumers at reasonable prices.

(*d*) 2,342 persons have been arrested for offences of hoarding, smuggling and black marketing during the period from 7th June 1966 to 25th May 1967. 2,196 cases have been filed in the Court.

(*e*) 2,342 persons as shown below :—

Madras City	186
Chingleput	255
South Arcot	88
Thanjavur	65
Tiruchirappalli	186
Madurai	213
Ramanathapuram	127
Tirunelveli	115
Kanyakumari	428
Coimbatore	103
The Nilgiris	3
Salem	44
Dharmapuri	111
North Arcot	126
Railway Police	292
Total	2,342

(*f*) Yes.